நாள்:18.2.09

# செய்தி வெளியீடு எண் – 117

அரசு நிர்வாக இயந்திரத்தின் அச்சாணியாக விளங்குகிறது கிராம நிர்வாகம். தமிழ் நாட்டில் உள்ள 12,506 வருவாய் கிராமங்களின் நிர்வாக அலுவலர் பணியிடங்களில் ஏற்படும் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழக அரசு முனைப்புடன் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதனடிப்படையில் 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் போட்டி தேர்வு நடத்தப்பட்டு 2,500 நபர்கள் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டனர்.

அரசின் கொள்கை முடிவின் காரணமாக 14.11.1980 நாளிட்ட அவசர சட்டத்தின்படி பகுதி நேர கிராம அலுவலர்கள் பதவி ஒழிக்கப்பட்டு விட்டதால் பதவி இழந்த கிராம அலுவலர்கள் பல கட்டங்களில் இதற்கு முன்னர் கிராம நிர்வாக அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டனர். அவர்களில் பணி நியமனம் பெறாமல் விடுபட்டு போன 39 நபர்கள் கிராம நிர்வாக அலுவலர்களாக தற்போது 13.01..2009 நாளிட்ட அரசாணை வாயிலாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதே போல் 14.11.1980–க்கு முன்னர் பகுதி நேர கிராம அலுவலர்களான பணிபுரியாவிட்டாலும், அப்பதவிக்குரிய சிறப்புத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று கிராம அலுவலர்களாக பணிபுரிவதற்கு தகுதி படைத்திருந்தும் பணிபுரிய வாய்ப்பு கிடைக்காமல் போன நபர்களுக்கும் கிராம நிர்வாக அலுவலர் பதவி வழங்க அரசு முடிவு செய்தது. அதன்படி, அவர்களுக்கு சிறப்பு தகுதி காண் தேர்வு நடத்தி தேர்வில் தேர்ச்சி பெற்ற தகுதியுள்ள 792 நபர்கள் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு தேர்ந்தேடுக்கப்பட்டனர். கலைவாணர் அரங்கத்தில் மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் தலைமையில் 18.02.2009 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் தேவையான சான்றிதழ்களை முழுமையாக

சமர்ப்பித்த 772 நபர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான பணி நியமனம் ஆணைகள் வழங்கப்பட்டன. இதனையும் சேர்த்து கடந்த 31 மாதங்களில் 3,331 கிராம நிர்வாக அலுவலர் காலிபணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

## VAOs

| Sl. No | Name of the District | No.of candidates allotted | No.of appointment orders issued |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | Ariyalur | 42 | 42 |
| 2 | Coimbatore | 59 | 58 |
| 3 | Cuddalore | 60 | 60 |
| 4 | Erode | 49 | 47 |
| 5 | Karur | 18 | 17 |
| 6 | Krishnagiri | 22 | 22 |
| 7 | Nagapattinam | 30 | 30 |
| 8 | Namakkal | 41 | 41 |
| 9 | Perambalur | 11 | 11 |
| 10 | Pudukottai | 17 | 17 |
| 11 | Ramanathapuram | 21 | 20 |
| 12 | Salem | 1 | 1 |
| 13 | Sivagangai | 73 | 73 |
| 14 | Thanjavur | 26 | 26 |
| 15 | The Niligiris | 6 | 6 |
| 16 | Thoothukudi | 12 | 12 |
| 17 | Tirichirapalli | 51 | 51 |
| 18 | Tirunelveli | 38 | 38 |
| 19 | Tiruvallur | 56 | 56 |
| 20 | Tiruvannamalai | 23 | 23 |
| 21 | Tiruvarur | 27 | 27 |
| 22 | Vellore | 12 | 12 |
| 23 | Villupuram | 64 | 63 |
| 24 | Virudhunagar | 19 | 19 |
| | **Total** | 778 | 772 |